# தலைநகரில் குற்றச்செயல்கள், போக்குவரத்து நெரிசலைக் குறைக்க 20,000 சிசிடிவிக்கள் தேவை!

(நமது நிருபர்)

கோலாலம்பூர், ஜூலை 16- தலைநகர் முழுவதும் போக்குவரத்து மற்றும் குற்றச்செயல்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள குறைந்தபட்சம் 20,000 சிசிடிவி கேமராக்கள் தேவைப்படுகின்றன.

போக்குவரத்து, வெள்ளம், கான்கிரீட் சரிவு ஆகியவற்றைக் கண்காணிக்கத் தலைநகர் சுற்றுப் பகுதிகளில் இதுவரை 5,000 சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு விட்டதாகத் துணைப் பிரதமர் டத்தோஸ்ரீ டாக்டர் அகமட் ஸாஹிட் ஹமிடி தெரிவித்தார்.

இந்த எண்ணிக்கையில் ஒரு பகுதி கேமராக்கள் பாதுகாப்பான நகரக் கண்காணிப்பு மற்றும் குற்றச்செயல் கண்காணிப்பை மையமாகக் கொண்டு பயன்படுத்தப்படும்.

கோலாலம்பூர் மாநகர் மன்றத்திற்கு இப்போதிருந்து 13ஆவது மலேசியத் திட்டம் முடியும் வரை 20,000 சிசிடிவிக்கள் தேவைப்படுவதால் இம்முயற்சியை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.



இப்பணிகளைத் தனியாக மேற்கொள்ள முடியாது என்பதால் கூடுதலான சிசிடிவிக்களைப் பொருத்த ஒதுக்கீட்டுத் தொகையைத் தேட மாநகர் மன்றத்திற்குப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது என்று புக்கிட் ஜாலிலிலுள்ள கோலாலம்பூர் சமிக்ஞை விளக்குக் கட்டுப்பாடு மற்றும் போக்குவரத்துத் தகவல் மையத்தில் நடைபெற்ற சாலைப் பாதுகாப்பு மற்றும் குற்றவியலுக்கான அமைச்சரவை செயற்குழு கூட்டத்திற்குத்தலைமையேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய போது பாகான் டத்தோ நாடாளுமன்ற உறுப்பினருமான டத்தோஸ்ரீ டாக்டர் அகமட் ஸாஹிட் ஹமிடி குறிப்பிட்டார் .